**தலைப்பு 262 – மாத்தறை மாவட்ட செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் மூன்றாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழுள்ள ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று, என்பன மாத்தறை மாவட்ட செயலகத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 262 – மாத்தறை மாவட்ட செயலகத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 யூன் 04 ஆந் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக மாத்தறை மாவட்ட செயலகத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.21 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது வெளிப்படுத்தப்பட்ட பின்வரும் அட்டவணையில் பொழிப்பாக்கி தரப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிப் பொறுப்பை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளார் என்பது அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் | நிதிப்பிரமாணம் 128 (i) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஒழுங்குவிதிகளுடன் இணங்கி நடக்காமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|---|
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும் நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல் | 1 | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட பிரதான செயற்பாடுகளை நிறைவேற்றும் வகையில் தயாரிக்கப்படாமை | 2.2.1 |
| | | 2 | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை. | 2.2.2 (அ) |
| | | 3. | செயற்திட்டங்கள் பூர்த்தியாக்கப்படாது கைவிடப்படல் | 2.2.2 (ஆ) |
| | | 4. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் இனங்காணப்பட்டு நடவடிக்கை எடுக்காமை. | 2.3 |
| | | 5. | தேசிய செயற்திட்டங்களில் உள்ளடக்கப்பட்ட சில வேலைகள் கைவிடப்படல். | 2.4(அ) |
| | | 6. | செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்படாது தொடர்ந்து மேற்கொள்ளல் | 2.4(ஆ) |
| 128(1)(ஆ) | தமது திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாடு மற்றும் கணக்கீட்டிற்கான ஒழுங்கமைப்பு வெற்றியளித்துள்ளது என்பதற்கும் தேவையான சந்தர்ப்பங்களில் அரசாங்கத்திற்கு | 1. | பெறுகை நடைமுறைகளை அமுல்படுத்துவதிலுள்ள குறைபாடுகள் | 2.5 |
| | | 2. | கடப்பாடுகளும் பொறுப்புக்களும் | 2.7 |
| | | 3. | பொது மக்களுக்கான | 2.13 |

| | | | |
|---|---|---|---|
| | கிடைக்க வேண்டிய கட்டணங்களை சரியாக உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அவற்றை முறைப்படியாகவும் முழுமையாகவும் தாமதமின்றியும் சேகரித்துக்கொள்வதற்கும் பெற்றுக்கொள்ளப்படுகின்ற பணத்தை கணக்கீடு செய்வதற்கும் அரசாங்கத்திற்கான பொறுப்புக்களுக்கு கடப்பாடு செய்வதற்கு அதிகாரம் வழங்குவதற்கும் நிறைவேற்றப்பட்ட சேவைகள் வழங்குவதனை மேற்பார்வை மற்றும் பரிசோதனை செய்வதற்கும் அவை அரசாங்கத்தின் நிதிகளிலிருந்து அதற்காக தாமதமின்றியும் சரியாகவும் கொடுப்பனவு செய்வதற்கு ஒழுங்குவிதிகள் வழங்குதல். | சேவைகளை நிறைவேற்றுவதிலுள்ள குறைபாடுகள் | |
| | | 4. ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் வழங்கிய நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல். | 2.15 |
| | | 5. கட்டு நிதி கணக்கு | 2.17 |
| | | 6. பொது வைப்புக் கணக்கு | 2.18 |
| 128(1)(இ) | நிதிப் பிரமாணம் மற்றும் அரசின் ஏனைய குறைநிரப்பு அறிவுறுத்தல்களையும் தனது திணைக்களம் பின்பற்றுவதாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றதெனவும். | 1. தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வு பந்திகள் | 2.12 |
| | | 2. பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை | 2.19 |
| | | 3. இணக்கமின்மைகள் | 2.20 |
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசின் கட்டுக்கோப்பில் காணப்படும் பணம், பொருட்கள் உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவிலும் முறையாகவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவை காலத்திற்குக் காலம் சரி பார்க்கப்படுகின்றதெனவும் அவற்றை தீர்வு செய்யும் போது அவ்வாறு தீர்வு செய்தல் உரிய ஒழுங்கு விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்கி உள்ளன எனவும், | 1. சொத்துக்களை பதிவேடுகளில் பதிதல் | 2.6(அ) |
| | | 2. வாகனப் பாவனை | 2.6 (ஆ) |
| | | 3. அரசாங்க சொத்துக்களின் பெறுமதி மற்றும் தரம் குறைடைதல் | 2.6(ஈ) |
| | | 4. பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள் | 2.6(உ) |
| 128(1)(ஏ) | நிலுவையாகக் காணப்பட்ட கட்டணங்கள் முதலியவற்றை அறவீடு செய்வதற்கு விசேட ஒழுங்கு விதிகளைப் பயன்படுத்துவதற்கு மற்றும் அந்த நடவடிக்கைகள் | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளில் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளை அறவீடு செய்தல் | 2.16 |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்படைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களால் நிலுவைப் பணம் தொடர்பாக அவற்றினை அறவீடு செய்வதனைத் துரிதப்படுத்துவதற்கு எடுக்கப்படுகின்ற முயற்சிகள் தொடர்பாக ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை அல்லது ஏனைய தரப்பினர்களால் பணிக்கப்பட்டவாறு தமக்கு அறிக்கையிடுதல் | | |
| 128(I) (ஐ) | அரசாங்கத்தின் நடவடிக்கைகளை நிறைவேற்றும் போது எதிர்பாராத்த சிக்கனம், விளைதிறன், ஒழுங்குமுறை, நேர்மை, ஆகிய விடயங்கள் தொடர்பாக முறையான கவனத்துடன் தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பது (இங்கு சிக்கனம் என்பதால் கருதப்படுவது மதிப்பீடு செய்யப்பட்ட செலவினத்தை மேற்கொள்வதல்ல, செலவிடப்பட்ட பணத்தின் மூலம் அரசிற்கு உயர்ந்த பெறுமதி கிடைக்கப்பெறுவதை உறுதிப்படுத்துதல்) | 1. முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள் | 2.8 |
| | | 2. சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் | 2.10 |
| | | 3. முகாமைத்துவ பலவீனங்கள் | 2.11 |
| 128(1) (கூ) | உத்தியோகத்தர்கள் / ஊழியர்களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் கடைப்பிடிக்கப்பட்டதாகவும், நிதிப்பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் /ஊழியர்கள் பேரில் மிகை கட்டணங்கள் விதிக்கப்படுவதாகவும் பொறுப்பாகும். | 1. சொத்துக்களிலிருந்து அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானம் கிடைக்காமை. | 2.6(இ) |
| | | 2. நட்டங்களும் சேதங்களும் | 2.9 |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 மாவட்ட செயலகத்தின் பிரதான செயற்பாடுகள்

(அ) கடல் பெருக்கெடுத்தல், வரட்சி, வெள்ளம், சூறாவளி ஆகிய பாரிய இடர் சந்தர்ப்பங்களின் போது அரசாங்கத்தின் முகவராகச் செயற்பாட்டு இடர் முகாமைத்துவ நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல், அமுல்படுத்துதல், மேற்பார்வை செய்தல் என்பவற்றின் மூலம் மக்களின் வாழ்க்கையை நல்ல நிலைமைக்கு கொண்டுவருதலும் உறுதிப்படுத்தலும்.

(ஆ) மாவட்ட பாதுகாப்புக் குழுவின் தலைவராக செயற்பட்டு மாவட்ட அதிகாரப் பிரதேசத்தில் வாழுகின்ற மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(இ) மாவட்டத்தில் கலாச்சார, சமய, மற்றும் ஏனைய காலத்திற்கு பொருத்தமான அரசாங்க விழாக்களை ஒழுங்குபடுத்தும் தலைவராகச் செயற்படல்.

(ஈ) பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துதல் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பு முழுவினதும் மாவட்ட அபிவிருத்திக் குழுவினதும் செயலாளராகச் செயற்பட்டு மாவட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல், அமுல்படுத்துதல், மேற்பார்வை செய்தல் என்பன.

(உ) மாவட்டத்திலுள்ள 16 பிரதேச செயலாளர்களுடன் பிரதேச நிர்வாக நடவடிக்கைகளைச் செயற்படுத்தும் பிரதானியாக நடவடிக்கை எடுத்தலும் அதன் செயற்திறனை மேம்படுத்துதலும்,

(ஊ) நிர்வாக நடவடிக்கைகளின் போது வினைத்திறன் மற்றும் தரத்தை மேம்படுத்துவதற்காக நவீன தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை ஈடுபடுத்துதலும் அதற்காக பதவியணியினருக்கு அக்கறையூட்டுதல்.

(எ) மாவட்ட அதிகாரப் பிரதேசத்திலுள்ள அனைத்து அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் பிரதித் தலைவராகச் செயற்பட்டு அந்நிறுவனங்களின் குறிக்கோள்கள், நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகளை நிறைவேற்றும் வகையில் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(ஏ) அனைத்து தேர்தல் நடவடிக்கைகளின் போது அதாவது சனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி தேர்தல்களின் போது தேர்தல்கள் ஆணையாளர் பிரதிநிதியாக மாவட்ட தெரிவத்தாட்சி உத்தியோகத்தராகச் செயற்பட்டு நியாயமான மற்றும் பக்கச்சார்பற்ற தேர்தல்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(ஐ) மாவட்ட செயலகத்தின் மற்றும் பிரதேச செயலகங்களின் பதவியணி உத்தியோகத்தர்களின் ஆற்றல்களையும் இயலுமையையும் முன்னேற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல்.

(ஒ) பல்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் என்பன சம்பந்தப்பட்ட வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் சார்பாக அவர்களின் வருமானங்களைச் சேகரித்தல், கணக்கீடு செய்தல், திறைசேரிக்கு பணத்தை அனுப்பி வைத்தல் மற்றும் உரிய வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தருக்குத் தெரியப்படுத்துதல்.

(ஓ) வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள் மற்றும் உள்நாட்டு நிதிச் செயற்திட்டங்களைக் கண்காணித்தல் மற்றும் மேற்பார்வை செய்வதன் மூலம் சொத்துக்கள் முகாமைத்துவ முறைமையை அபிவிருத்தி செய்தல்.

### 2.2 செயலாற்றல்

### 2.1.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 அந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க மீளாய்வாண்டின் போது மாவட்ட செயலகத்தால் நிறைவேற்றப்பட வேண்டிய 08 பிரதான செயற்பாடுகள் காணப்பட்டதுடன் மாவட்ட செயலகத்தின் கீழ்

ஸ்தாபிக்கப்பட்டுள்ள 16 பிரதேச செயலகங்கள் எதிர்பார்க்கப்பட்ட பிரதான செயற்பாடுகளை நிறைவேற்றும் வகையில் செயல் நடவடிக்கைத் திட்டத்தை தயாரித்திருக்கவில்லை.

### 2.2.2 செயற்பாடுகளை நிறைவேற்றாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றாமை.**

வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திக்வெல்ல, திஹகொட, பிடபெத்தர, ஹக்மன ஆகிய பிரதேச செயலகங்களில் மேலதிக புதிய கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 157.00 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. திக்வெல்ல, திஹகொட ஆகிய இரண்டு பிரதேச செயலகங்களில் மேலதிகக் கட்டிடங்களை நிர்மாணித்தலை மீளாய்வாண்டில் முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. பஸ்கொட பிரதேச செயலகத்தில் மின்சார முறைமையை நவீனமயப்படுத்துவதற்காக ரூபா 0.80 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் அச்செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. தெவிநுவர பிரதேச செயலகத்தில் கணனிப பிரிவைத் தோற்றுவிப்பதற்காக ரூபா 0.30 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் அச் செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாது கைவிடுதல்.**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மாத்தறை நில்வளா செயற்திட்டம் தொடர்பாக மாவட்ட செயலகத்தால் அமுல்ப்படுத்தப்பட்ட ரூபா 1.82 மில்லியன் மதிப்பீட்டுப் பெறுமதியான 02 செயற்திட்டங்களுக்காக உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருந்தும் அச் செயற்பாடுகள் அமுல்ப்படுத்தப்படாது இரத்துச் செய்யப்பட்டிருந்தன.

(ii) மாத்தறை நில்வலா நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் தெவிநுவர பிரதேச செயலகத்திலுள்ள தெல்கல்ல தல்பாவில பிரதான வீதியின் பக்கச் சுவரை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 1.79 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 18,716 செலவு செய்யப்பட்டிருந்தது. அந்த வேலைகளின் செயல் முன்னேற்றமும் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது. 2018 ஆம் ஆண்டின் போது நிதி ஏற்பாடு பெற்றுக்கொள்ளப்படாததன் அடிப்படையில் இவ்வேலைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

(iii) 262-1-1-0-2509 ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீதிகளையும் உட்கட்டமைப்பு வசதிகளையும் புனர் நிர்மாணிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட 10 செயற்திட்டங்களுக்காக கொடபொல பிரதேச செயலகத்திற்கு ரூபா 7.5 மில்லியன் நிதி எற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் அச் செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், கொடபொல பிரதேச செயலகத்திலுள்ள ரூபா 3.50 மில்லியன் உடன்படிக்கை செய்த பெறுமதியான 04 செயற்திட்டங்களும் தெவிநுவர பிரதேச செயலகத்திலுள்ள ரூபா 915,141 உடன்படிக்கை செய்த பெறுமதியான ஒரு வேலையும் அமுல்ப்படுத்தப்படாது கைவிடப்பட்டிருந்தது.

### 2.3 நிலைபேறான அபிவிருத்தி

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 இன் பிரகாரம் அடைந்து கொள்ளப்பட வேண்டிய குறிக்கோள்களையும் இலக்குகளையும் அடைந்து கொள்ளுவதற்கான ஆயத்தம் தொடர்பாக பரீட்சிக்கும் போது மீளாய்வாண்டில்

மாவட்ட செயலகத்தினால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, மாவட்ட செயலகத்தினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களும் இலக்குகளும் 2018 மே 28 ஆந் திகதி வரை இனங்கண்டு அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 அமுல்ப்படுத்தப்பட்ட உள்நாட்டு செயற்திட்டங்கள்

மீளாய்வாண்டின் போது மாவட்ட செயலகத்தால் உள்நாட்டு நிதிகளை ஈடபடுத்தி அமுல்ப்படுத்தப்பட்ட 14 செயற்திட்டங்களுக்காக ரூபா 2,603.04 மில்லியன் மொத்த நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 820.34 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க ரூபா 1,782.70 மில்லியன் அல்லது வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் 68 சதவீதமான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) உள்நாட்டுச் செயற்திட்டங்களில் உள்ளடக்கப்பட்ட சில வேலைகள் கைவிடப்பட்டமை.

10 செயற்திட்டங்களில் உள்ளடக்கப்பட்ட 205 வேலைகள் போதியளவு காலம் இல்லாமை, முறைப்படியாக திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்படாமை, ஏனைய நிறுவனங்களால் அமுல்ப்படுத்தப்படுகின்றமை, மதிப்பீட்டைத் தயாரிப்பதற்கும், மேற்பார்வை நடவடிக்கைகளுக்குமான தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை ஆகிய பல்வேறு காரணங்களால் கைவிடப்பட்டிருந்தன. அவற்றில் இனங்காணப்பட்ட 124 வேலைகளின் பெறுமதி ரூபா 123.02 மில்லியனாக இருந்தது.

### (ஆ) செயற்திட்டங்களை தொடர்ந்து மேற்கொள்ளல்

10 செயற்திட்டங்கள் தொடர்பாக அமுல்ப்படுத்தப்பட்ட 157 வேலைகளை மீளாய்வாண்டின் இறுதி வரை பூர்த்தி செய்வததற்கு முடியாதிருந்ததன் காரணமாக அவ்வேலைகள் 2018 ஆம் ஆண்டில் தொடர் வேலையாக்கப்பட்டிருந்தன. அந்த தொடர் வேலைகளின் பெறுமதி ரூபா 820.61 மில்லியனாகும்.

## 2.5 பெறுகைகள்

மாவட்ட செயலகத்திற்கு மீளாய்வாண்டின் போது பெறுகை நடைமுறைகளின் மூலம் வழங்கல்கள் மற்றும் சேவைகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 2,076 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 488 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துவதற்காகப் பின்பற்றப்பட்ட பெறுகை நடைமுறையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 281 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்ட மாத்தறை நில்வலா நகர அபிவிருத்திச் செயற்திட்டத்தை அமுல்ப்படுத்தும் போது பெறுகைத் திட்டமும் பெறுகைக் கால அட்டவணையும் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் ஒப்பந்தங்களை கோவை செய்யும் நடவடிக்கையும் முறைப்படியாக இடம்பெற்றிருக்கவில்லை.

(ஆ) பிடபெத்தர பிரதேச செயலகத்தின் புதிய கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக கட்டிட திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 138 மில்லியனாக இருந்தது. அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.3.2 ஆம் வழிகாட்டிக்கு முரணாக அங்கீகரித்த அதிகார எல்லையை மிகைத்து மாவட்ட செயலகத்தால் மேற்கூறிய மொத்த கிரய மதிப்பீடு 2017 செப்தெம்பர் 11 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

(இ) மாவட்ட செயலகம் மற்றும் 03 பிரதேச செயலகங்களால் (முலடியான, வெலிகம, திஹகொட) 59 சந்தர்ப்பங்களின் போது ரூபா 12.12 மில்லியன் கூட்டு மொத்தமான வழங்கல்களையும் சேவைகளையும் பெற்றுக்கொள்ளும் போது அங்கீகரித்த பெறுகைக் குழுவின் மூலம் இடம் பெற்றிருக்கவில்லை.

(ஈ) மாவட்ட செயலகம் மற்றும் 11 பிரதேச செயலகங்களுக்காக 2017 ஆம் ஆண்டிற்குத் தயாரிக்கப்பட்ட பெறுகைக் திட்டம் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு காலத்துக்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) 06 பிரதேச செயலகங்களால் (முலடியான, வெலிகம, திக்வெல்ல, கொடபொல, வெலிபிடிய, திஹகொட) அரசாங்க கெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2 மற்றும் 4.3.3 ஆம் வழிகாட்டல்களின் பிரகாரம் பெறுகைக் கால அட்டவணையும் காலக்கட்டமைப்பும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மாவட்ட செயலகத்தால் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 6.3.3. ஆம் வழிகாட்டியின் பிரகாரம் கேள்விகள் திறக்கும் குழுவானது பெறுகைக் குழுவினால் நியமிக்கப்பட வேண்டிய போதிலும் பெறுகைக் குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாது கேள்வி திறக்கும் குழு நியமிக்கப்பட்டிருந்தது.

(எ) வெலிகம பிரதேச செயலகத்தில் ரூபா 12.58 மில்லியன் நிதி ஏற்பாட்டைத் தீர்மானிக்கும் 15 சந்தர்ப்பங்களுக்குரிய அறிக்கைக் குறிப்புக்கள் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.11.3 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் வருகை தந்த அங்கத்தவர்களால் கையெழுத்திடப்படாது சான்றுபடுத்தப்பட்டிருந்தது.

(ஏ) அதுரலிய பிரதேச செயலகத்தால் ரூபா 7.81 மில்லியன் தொகையான உலர் உணவுகளை கொள்வனவு செய்வதற்காக மாவட்ட பெறுகைக் குழுவின் மேல் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அது அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.14.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் அவசர சந்தர்ப்பங்களில் பெறுகை நடைமுறைகளை மீறுவதற்காக அதிகார எல்லை மீறப்பட்டிருந்தது.

(ஐ) மாவட்ட செயலகம் மற்றும் 04 பிரதேச செயலகங்கள் (மாத்தறை, கம்புறுபிடிய, பிடபெத்தர, திஹகொட) ரூபா 1.81 மில்லியன் கூட்டு மொத்த தொகையான கணனி, மனைப்பொருட்கள், மற்றும் அலுவலக உபகரணங்கள் சம்பந்தமாக அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.6.1 (அ) மற்றும் 5.6.1 (இ) வழிகாட்டிகளுக்கு முரணாக நடவடிக்கை எடுத்திருந்தன.

(ஒ) மாவட்ட செயலகத்தால் ரூபா 1.81 மில்லியன் பெறுமதியான கணனி உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் போது அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.9.1 (ஆ) வழிகாட்டியின் பிரகாரம் ரூபா 500,000 இனை மிகைத்த பொருட்கள் மற்றும் சேவைகள் ஒப்பந்தத்திற்காகச் முறையான உடன்படிக்கை செய்து கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஓ) திஹகொட பிரதேச செயலகத்தால் ரூபா 2.35 மில்லியன் தொகையான கொள்வனவு சம்பந்தமாக அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.14.1 மற்றும் 3.8 ஆம் வழிகாட்டிகளின் பிரகாரம் மாவட்ட பெறுகைக் குழுவின் மேல் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

மாவட்ட செயலகத்தின் சொத்துக்கள் சம்பந்தமாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

**(அ) சொத்துக்களை ஏடுகளில் பதிவு செய்தல்**

-----------------------------------------------------------------

மாவட்ட செயலகத்தின் சொத்துக்கள் சம்பந்தமான தகவல்கள் 2017 யூன் 28 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் கொம்ப்டோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டியிருந்தது. கணக்காய்வுத் திகதியான 2018 மே 21 ஆந் திகதி வரை மாவட்ட செயலகம் மற்றும் 12 பிரதேச செயலகங்களால் நிர்மாணங்கள், கட்டிடங்கள் காணிகள் சம்பந்தமான தகவல்களும் திக்வெல்ல பிரதேச செயலகத்தால் கருவிகளும் இயந்திரங்களும், நிர்மாணங்கள் கட்டிடங்கள், காணிகள், அலுவலக உபகரணங்கள் மற்றும் மனைப் பொருட்கள் சம்பந்தமான தகவல்களும் கொம்டோலர் ஜெனரலுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(அ) வாகனங்களின் பயன்பாடு**

--------------------------------------------

மாவட்ட செயலகத்திற்கு சொந்தமாக மீளாய்வாண்டின் இறுதியளவில் 56 வாகனங்கள் காணப்பட்டதுடன் அவ்வாகனங்களில் இரண்டு கெப் வாகனங்களைத் தவிர்த்து ஏனைய வாகனங்கள் 763,410 கிலோ மீற்றர்கள் ஓடியிருந்தது. அதற்கான எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி எண்ணெய்க்காக ரூபா 7,091,474 தொகையும், வாகனங்களை சேவை செய்வதற்காக ரூபா 2,971,210 தொகையும் வாகனங்களைப் பழுதுபார்ப்பதற்காக ரூபா 5,569,751 தொகையும் வாகனங்களை காப்புறுதி செய்வதற்காக ரூபா 1,419,701 தொகையுமாக ரூபா 17,052,136 மொத்த தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க மாவட்ட செயலகத்தால் வாகனங்களை ஓடுவதற்காக சாரதிகளின் சம்பளங்களையம் மற்றும் படிகளையும் தவிர்த்து ஒரு கிலோ மீற்றருக்கு ரூபா 22.33 (உழவு இயந்திரத்தையும் பெட்டியையும் தவிர்த்து) செலவு செய்யப்பட்டிருந்தது.

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குச் சொந்தமான அனைத்து வாகனங்களினதும் எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட வேண்டியிருந்தும் மாவட்டச் செயலத்திற்குச் சொந்தமான எந்த வாகனத்தினதும் எரிபொருள் நுகர்வு பரிட்சீக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க ஓட்ட அட்டவணைகளை எழுதும் போது பயன்படுத்தப்படுகின்ற எரிபொருள் நுகர்வு சம்பந்தமான பெறுமதியின் சரியான தன்மையையும் சிக்கனத் தன்மையையும் உறுதிப்படுத்திக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

(ii) மேற்கூறிய சுற்றறிக்கையின் 3.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு வாகனங்களின் பயன்படுத்திய எரிபொருள் அளவு சம்பந்தமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள படிவங்களைப் பராமரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மாவட்ட செயலகத்திற்கு மேலதிகமாக வெளிநிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களுக்காக எரிபொருள் கட்டளைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தும் அந்த அளவை தனித்தனியாக இனங்காண்பதற்கு முடியுமான வகையில் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

(iv) நாளாந்த ஓட்ட அட்டவணைகளின் பிரகாரம் ஒரு வாகனம் திருத்தம் செய்வதற்காக 2017 ஆகஸ்ட் 08 ஆந் திகதியிலிருந்து 2017 செப்தெம்பர் 28 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் ஒரு கராஜிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. வாகனக்கோவையின் பிரகாரம் அவ்வாறான திருத்தம் இடம் பெற்றிருக்காததுடன் அத்திருத்தங்களுக்குரிய பட்டியல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) வாகனங்கள் வெளிச் செல்லல் மற்றும் உள்வருதலை பதிவு செய்வதற்கு வாயில் கதவு காவலாளி பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

**(இ) சொத்துக்களிலிருந்து அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானம் கிடைக்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முறைப்படியாகவும் நடைமுறைப்படுத்தக் கூடிய வகையிலும் உடன்படிக்கை செய்து கொள்ளப்படாமை மற்றும் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக தெவிநுவர பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான ஒரு கட்டிடத்தை கூட்டுறவுச் சங்கத்திற்கு வாடகைக்கு வழங்கியதன மூலம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5.80 மில்லியன் மொத்த தொகையான வாடகை நிலுவையாகக் காணப்பட்டது.

(ii) மாத்தறை பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான பிரதேச செயலாளரின் உத்தியோகபூர்வ இல்லம் 2014 ஆகஸ்ட் மாதத்திலிருந்து 2017 யூலை மாதம் வரையான காலத்தின் போது வேறு தரப்பினருக்கு குடியிருப்பதற்காக வழங்கப்பட்டிருந்தது. இல்லத்தில் குடியிருப்பாளர்கள் தொடர்பான எதுவித எழுத்து மூல தகவலும் அலுவலகத்தினால் பேணப்பட்டிருக்காததுடன் இல்லத்தின் வாடகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) அரசாங்க சொத்துக்களின் பெறுமதியும் தரமும் குறைவடைதல்**

மாத்தறை மாவட்டத்தில் தனிப்பட்டவர்களாலும் நிறுவனங்களாலும் சொந்தமாக வைத்துக் கொண்டு பயன்படுத்தப்படுகின்ற துவக்குகளுக்காக வருடாந்த உத்தரவுப் பத்திரங்களை வழங்குதல் மாவட்ட செயலகத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 124 துவக்குகளையும் 122 செயற்படுகின்ற தோட்டங்களையும் மீண்டும் பொறுப்பேற்று அலுவலக களஞ்சியத்தில் உரிய பாதுகாப்பு மற்றும் முறையான செயல் நடைமுறைகளுக்கு இணக்கமற்ற வகையில் களஞ்சியப்படுத்தப்பட்டதன் காரணமாக பல துவக்குகள் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டன.

**(உ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

கீழே வகைப் பயன்படுத்தப்பட்டுள்ளவாறு சில சொத்துக்கள் பயன்படுத்தப்படாதும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டும் காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டன.

| | சொத்துக்களின் வகை | அலகு எண்ணிக்கை | பயன்படுத்தப்படாது காணப்பட்ட காலம் |
|---|---|---|---|
| (i) | கட்டிடம் அரசாங்க இல்லங்கள் (மாவட்ட செயலகம், மாத்தறை, வெலிபிடிய) | 04 | நீண்ட காலமாக |
| (ii) | முச்சக்கர வண்டி (திஹகொட, கொடபொல) | 02 | 01 – 02 ஆண்டுகள் |
| (iii) | மோட்டார் சைக்கிள்கள் (திக்வெல்ல, மாத்தறை) | 07 | 02 ஆண்டுகள் |

## 2.7 கடப்பாடுகளும் பொறுப்புக்களும்

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 2.5.1 வருடாந்த பாதீட்டு ஏற்பாடுகள் இல்லாது கடப்பாடுகளை மேற்கொள்ளல்

(அ) மீளாய்வாண்டின் போது ஒரு செலவு விடயத்திற்காக ரூபா 82.02 மில்லியன் தொகையான கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தது. 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 2(இ) பந்தியின் பிரகாரம் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய நிதி ஏற்பாடு 2018 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் வழங்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அச் செலவு விடயத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டின் இறுதியின் போது ரூபா 174.12 மில்லியன் பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தது. 2018 பெப்ரவரி 16 ஆந் திகதிய 106 ஆம் இலக்க குறை நிரப்பு நிவாரண சேவை மற்றும் அவசர தேவைப்பாட்டுப் பொறுப்புக்களின் கீழ் ரூபா 158.82 மில்லியன் பொறுப்புக்களுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே மேலும், ஒரு செலவு விடயத்திற்காக ரூபா 746.55 மில்லியன் கடப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தும் அதற்காக மேற்கூறிய சுற்றறிக்கையின் பிரகாரம் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய நிதி ஏற்பாடு 2018 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 சனவரி 01 ஆந் திகதியளவில் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வீதவரிக் கொடுப்பனவிற்காக ரூபா 569,563 தொகையான பொறுப்புக்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரை அப்பொறுப்புக்கள் தீர்த்து வைக்கப்படாதிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டின் போது அதற்காக நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 2.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.9.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம சந்தை விலை ஒப்பீட்டு முறைமை பின்பற்றப்பட்ட சந்தர்ப்பங்களின் போது பெறுகைக் குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் அங்கத்தவர்களுக்கு படிகள் செலுத்தப்படாதிருக்க வேண்டிய போதிலும் அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக ரூபா 861,500 தொகை குழுவின் அங்கத்தவர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2017 மே மாதத்தில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவு நிலைமையின் காரணமாக இன்னல்களுக்கு உள்ளாகிய பிரதேசங்களை புனரமைத்தல் மற்றும் மீள நிர்மாணித்தல் நடவடிக்கைகளுக்காக ரூபா 1500 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அந்த நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் செயற்திட்டத்தை அமுல்ப்படுத்தும் போது பதிவு செய்யப்பட்ட இரண்டு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விகள் பெற்றுக்கொள்ளப்பட்டு ரூபா 50 மில்லியன் வரையான செயற்திட்டங்களை அமுல்ப்படுத்தும் அதிகாரம் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும், இதற்கு இணக்கமற்ற வகையில் தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் தயாரிக்கப்பட்ட ரூபா 884.21 மில்லியன் மதிப்பீட்டு பெறுமதியினை அடிப்படையாகக் கொண்டு 24 செயற்திட்டங்களைப் புனரமைக்கும் வேலை தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு எதுவித பரிசோதனையுமின்றி மாவட்ட பொறியியலாளரால் சிபார்சு செய்யப்பட்டிருந்தது. மாவட்ட செயலக அதிகாரிகளுடன் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம்

பனரமைப்பு வேலைகளை மேற்பார்வை செய்தல் மாவட்ட பொறியியலாளரால் மேற்கொள்ளப்பட வேண்டுமெனக் காட்டப்பட்டிருந்தது. மாவட்ட பொறியியளாளரின் மேற்பார்வையின்றி ஒப்பந்தக்காரரின் மேற்பார்வையின் பேரில் மாத்திரம் வீதிகளைப் புனரமைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) மாவட்ட செயலாளரின் அங்கீகாரமின்றி தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை 24 செயற்திட்டங்களுக்குரிய வேலைகளை ரூபா 2 மில்லியன் எல்லைக்கு உட்பட்டு பகுதியாக உப ஒப்பந்தம் வழங்கியிருந்தது. எனினும், அந்த அபிவிருத்தி நடவடிக்கைகளின் மதிப்பீட்டு பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட விலைப்பட்டியல்கள் மாவட்ட செயலாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(iii) தென்மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளில் ஒரே வேலை விடயத்திற்காக பல்வேறு அலகு விலைகளை ஈடுபடுத்துதல் அங்கீகரித்த அலகு விலைகளுக்கு மாற்றமான விலைகளைப் பயன்படுத்துதல் விபரமான மதிப்பீடு இன்றி தற்காலிக பணமாக மதிப்பீடுகளுக்கு பணம் உள்ளடக்குதல் முதலிய பல தவறுகள் காணப்படுகின்றமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. அதிகார சபையினால் மிகவும் அண்மைக்காலத்தில் நிறைவேற்றப்பட்ட ரூபா 4 மில்லியன் மொத்த தொகையான 02 செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்கு உத்தேச செயற்பாடுகளை உள்ளடக்கும் மதிப்பீடுகளில் குறிப்பிட்ட ரூபா 4 மில்லியன் கிரயம் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(iv) மதிப்பீட்டின் பிரகாரம் ஈடுபடுத்துவதற்குத் திட்டமிடப்பட்ட மூலப்பொருட்களுக்குப் பதிலாக விலை குறைந்த மூலப்பொருட்களை ஈடுபடுத்திய 03 சந்தர்ப்பங்களும் முறைப்படியான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் மூலப்பொருட்களைப் பயன்படுத்திய 02 சந்தர்ப்பங்களும் வழங்கி மூடையாக்கியதன் பின்னர் பரப்புவதற்குத் திட்மிடப்பட்டிருந்த மூலப்பொருட்களை நேரடியாக வீதிகளுக்கு ஈடுபடுத்திய 03 சந்தர்ப்பங்களும் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது. அந்த ஏதாவது மாற்றங்கள் சம்பந்தமாக மாவட்டச் செயலாளரின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) மாத்தறை மாவட்ட செயலகம் கோட்போர் கூடத்தில் புதிய ஒலிபெருக்கி இயந்திர முறைமையைத் தோற்றுவிப்பது தொடர்பாக 2017 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 1.37 மில்லியன் கொடுப்பனவு செய்திருந்த போதிலும் 2018 மார்ச் 31 ஆந் திகதி வரையும் அச் செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மாத்தறை மாவட்ட செயலகத்தில் பாதுகாப்பு கமரா முறைமையைத் திருத்தம் செய்வதற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 586,450 செலுத்தப்பட்டிருந்தது. எனினும் 2018 மார்ச் 31 ஆந் திகதி வரையும் அச் செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 2.9 நட்டங்களும் சேதங்களும்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2002 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரையான ஆண்டுகளில் இடம்பெற்ற ரூபா 4.64 மில்லியன் மொத்த தொகையான 33 வாகன விபத்துக்களுக்கு மத்தியில் அவ் விபத்துக்கள் இடம்பெற்று 5 ஆண்டுகளிலிருந்து 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கால தாமதம் ஏற்பட்ட ரூபா 997,815 கூட்டுமொத்தமான 15 விபத்துக்களின் நட்டங்கள் சம்பந்தமாக உரிய பொறுப்பான தரப்பினர்களிடமிருந்து அல்லது அவ்வாறு இனங்காண்பதற்கு முடியாத நட்டங்கள் சம்பந்தமாக அப் பெறுமதியை ஏடுகளிலிருந்து

பதிவழிப்பதற்கு 2018 ஏப்ரல் 04 ஆந் திகதி வரை மாவட்ட செயலகத்திற்கு முடியாதிருந்தது.

(ஆ) வாகன விபத்துக்களைத் தவிர்த்து ரூபா 15.84 மில்லியன் கூட்டுமொத்தமான நட்டங்கள் மற்றும் சேதங்கள் 06 ஆண்டுகளிலிருந்து 34 ஆண்டுகள் வரையான கால வீச்சில் காணப்பட்டிருந்த போதிலும் அந் நட்டங்களை பொறுப்பான தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு அல்லது அவ்வாறு அறவீடு செய்வதற்கு முடியாத நட்டங்களை ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு மாவட்ட செயலகத்திற்கு 2018 ஏப்ரல் 04 ஆந் திகதி வரை முடியாதிருந்தது.

(இ) மாவட்ட செயலகத்தில் மற்றும் 11 பிரதேச செயலகங்களில் இடம்பெற்ற ரூபா 1,787,379 கூட்டுமொத்தமான 20 வாகன விபத்துக்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து முழுமையான அறிக்கை சமப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டில் 2 வாகனங்களுக்கு ஏற்பட்ட விபத்துக்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 103(1) மற்றும் நிதிப்பிரமானம் 104(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.10 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட சிக்கனமின்றி இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன.

(அ) மாத்தறை நில்வளா அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட உடன்படிக்கைப் பெறுமதி ரூபா 3.83 மில்லியனான 03 வீதி அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த சல்லிக்கற்கள் தொடர்பாக கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட தரப் பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் காணப்பட வேண்டிய தரம் 32 சதவீதத்திலிருந்து 87 சதவீதும் வரையான மிகவும் குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது.

(ஆ) மாவட்ட செயலகத்தால் கட்டணப் பதிவேடுகளை முறைப்படியாகப் பேணி உரிய காலப்பகுதியில் மின்சாரம் மற்றும் நீர்க் கட்டணங்களை செலுத்த வேண்டியிருந்தது. எனினும் அது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்காததன் காரணமாக உரிய காலப்பகுதிக்குள் மின்சாரம் மற்றும் நீர்க்கட்டணங்களைச் செலுத்தாமையின் காரணமாக முறையே ரூபா 111,010 மற்றும் ரூபா 52,918 ஆக ரூபா 163,928 மொத்த தொகையான தண்டங்களையும் மிகைக் கட்டணங்களையும் செலுத்த வேண்டிருந்தது. அவ்வாறே வீத வரிகளைச் செலுத்தும் போது உரிய காலப்பகுதிக்குள் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த நலன்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) வெள்ளத்தால் சேதமடைந்த வீதிகள்/ உட்கட்டமைப்பு வசதிகளை புனர்நிர்மாணிப்பதன் கீழ் கொடபொல பிரதேச செயலகத்தால் ரூபா 1.42 மில்லியன் செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட இரண்டு வீதி அபிவிருத்தித் செயற்திட்டங்களின் தரப்பரிசோதனை அறிக்கைகளின் பிரகாரம் பூர்த்தி செய்யப்பட்ட வீதிகள் உரிய நியமத்தில் இருக்கவில்லை.

(ஈ) ஹக்மன பிரதேச செயலகக் கட்டடத்தை நிர்மாணிப்பதற்காக 2017 திசெம்பர் 28 ஆந் திகதி ரூபா 68.22 மில்லியன் பெறுமதிக்கு உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கட்டிடம் நிர்மாணிக்கப்பட்ட காணியின் உரிமையைப் பொறுப்பேற்கும் நடவடிக்கை முழுமைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) 2018 ஜூன் 11 ஆந் திகதி வரை கட்டடத்தை நிர்மரிணப்பதற்காக வேலைத்தளம் முறைப்படியாக ஒப்பந்தகாரருக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வேலை ஆரம்பித்தல் முற்பணமாக ரூபா 15.69 மில்லியன் (பெறுமதி சேர் வரியை உள்ளடக்கி) ஒப்பந்க்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.4 ஆம் வழிகாட்டிக்கு முரணாக ரூபா 196,650 முற்பணம் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(iv) கணக்காய்வுத் திகதியான 2018 ஜுன் 11 ஆந் திகதி வரையும் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன் வேலை முற்பணமாகச் செலுத்தப்பட்ட ரூபா 15.69 மில்லியன் 05 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் வெளித்தரப்பினரின் கையில் வைத்திருக்கப்பட்டது.

(v) கட்டடத்தை நிர்மாணிப்பதற்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய நிறுவனங்களிடமிருந்து தேவையான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமை மற்றும் கட்டடத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அங்கீகரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னர் கட்டட நிர்மாணத்திற்காக ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டிருந்தது.

(உ) வெலிபிடிய பிரதேச செயலகக் கட்டடத்தை நிர்மாணிப்பதற்காக 2017 நவம்பர் 01 ஆந் திகதி ரூபா 9.28 மில்லியன் பெறுமதிக்கு உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டிருந்தது. 2017 நவம்பர் 27 ஆந் திகதி வேலை ஆரம்பிக்கும் முற்பணமாக ரூபா 2,676,319 ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் ஒப்பந்த பெறுமதியில் 20 சதவீதம் வேலை ஆரம்பிக்கும் முற்பணம் செலுத்த வேண்டியிருந்தும் 30 சதவீதம் அளவான முற்பணம் செலுத்தப்பட்டதன் காரணம்மாக ரூபா 892,106 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**2.11 முகாமைத்துவ பலவீனம்**

தெவினுவர பிரதேச செயலகத்தால் 07 வேலைகளுக்காக ரூபா 3,338,394 செலவு செய்யப்பட்டிருந்தது. அவ் வேலைக்காக ஈடுபடுத்தப்பட்ட கொங்கிறீட் பொருட்கள் உரிய நியமத்திற்கு இணங்கியுள்ளன என்பதனை உறுதிப்படுத்துவதற்கு ஆய்வுகூடத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. எனினும் அந்த மாதிரிகள் நிர்ணயிக்கப்பட்ட நாட்களை விட குறைந்த காலத்தில் ஆய்வுகூடத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததன் காரணமாக அப் பரிசோதனை அறிக்கைகளின் சரியான தன்மையும் நம்பகத்தன்மையும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.12 தீர்த்துவைக்கப்படாத கணக்காய்வுப் பதந்திகள்**

2015 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் 3.3.2(இ) பந்தியில் குறிப்பிட்ட மாத்தறை பிரதேச செயலகத்தில் தொடமுன மீன்படி இறங்குதுறையை நிர்மாணிப்பது சம்பந்தமான குறைபாடுகள் மீளாய்வாண்டின் இறுதி வரை மாவட்ட செயலகத்தால் சரி செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.13 பொது மக்களுக்கு சேவைகளை நிறைவேற்றுதல்**

மாவட்ட செயலகத்தால் இணையத்தளத்தை நிர்மாணித்து அதன் மூலம் தேவையான தெளிவுப்படுத்தல்களும் பொது மக்களின் முறைப்பாடுகளைப் பெற்றுக் கொள்ளும் நடைமுறையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. பொது மக்களால் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள் சம்பந்தமாக பொது மக்கள் முறைப்பாட்டுப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

**2.14 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலத்தில் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்களும் அவை தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்களும் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | சேமிப்பு தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 2013 | மீண்டுவருபவை | 813.04 | 812.18 | 0.86 | 0.11 |
| | மூலதனம் | 97.69 | 97.56 | 0.13 | 0.13 |
| | மொத்தம் | 910.73 | 909.74 | 0.99 | |
| 2014 | மீண்டுவருபவை | 784.15 | 783.55 | 0.6 | 0.08 |
| | மூலதனம் | 108.76 | 106.67 | 2.09 | 1.92 |
| | மொத்தம் | 892.91 | 890.22 | 2.69 | |
| 2015 | மீண்டுவருபவை | 991.54 | 929.72 | 61.82 | 6.23 |
| | மூலதனம் | 82.81 | 71.22 | 11.59 | 14.00 |
| | மொத்தம் | 1,074.35 | 1,000.94 | 73.41 | |
| 2016 | மீண்டுவருபவை | 953.57 | 950.07 | 3.5 | |
| | மூலதனம் | 179.55 | 50.27 | 129.28 | 0.37 |
| | மொத்தம் | 1,133.12 | 1,000.34 | 132.78 | 72.00 |
| 2017 | மீண்டுவருபவை | 889.95 | 887.90 | 2.05 | 0.23 |
| | மூலதனம் | 2,053.71 | 465.73 | 1,587.98 | 77.32 |
| | மொத்தம் | 2,943.66 | 1,353.63 | 1,590.03 | |

மீளாய்வாண்டிற்கான மதிப்பிடு செய்யப்பட்ட செலவுகளும் உள்ளபடியான செலவுகளும் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

உரிய முறைப்படி மதிப்பீட்டினைத் தயாரிக்காமை மற்றும் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு உரிய காலத்தில் பயன்படுத்தாமையின் காரணமாக 06 செலவு விடயங்களுக்கு நிதி ஏற்பாட்டை பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் 13 சதவீதத்திலிருந்து 84 சதவீதம் வரையான வீச்சுடைய அளவினைக் கொண்டிருந்தது.

**2.15 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல்**

31 அமைச்சுக்கள் 20 திணைக்களங்கள் மற்றும் 02 அலுவலகங்களால் பல்வேறு செயற்பாடுகளுக்காக முறையே ரூபா 3,257.61 மில்லியன் மற்றும் ரூபா 170.69 மில்லியன் மற்றும் ரூபா 22.49 மில்லியனாக ரூபா 3,450.79 மில்லியன் மொத்த தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரை அவற்றில் ரூபா 2,315.36 மில்லியன் மொத்த தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 1,135.42 மில்லியன் அல்லது 32.9 சதவீதமான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபர்டுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) மாவட்ட செயலகம் மற்றும் 03 பிரதேச செயலகங்களால் (கும்புறுபிடிய, மாலிம்பட, திக்வெல்ல) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையில் குறிப்பிட்ட 1.2.1, 2.11.3(அ), 2.14.1, 3.4, 3.4.2(அ), 3.4.3, 3.4.4, 5.2.1, 5.3.2, 5.3.3, 5.6, 5.6.1(இ) மற்றும் (ஈ), 6.3.1, 6.3.2, 6.3.3, 6.3.6, 6.3.7, 7.7 ஆகிய வழிகாட்டிகளுக்கு முரணாக ரூபா 11.36 மில்லியன் மொத்த தொகையான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

(ஆ) மாவட்ட செயலகத்தால் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 1.2.1(அ), 1.2.1(ஊ), 1.3.2, 2.14.1, 6.3.6, 3.4.2, 3.4.3, 3.4.4 ஆகிய வழிகாட்டிகளில் குறிப்பிட்ட ஒழுங்கு விதிகள் பின்பற்றப்படாது ரூபா 2.05 மில்லியன் கூட்டு மொத்தமான வழங்கல்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(இ) போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சினால் மாத்தறை கதிர்காமம் புதிய புகையிரத வீதிச் செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 25.38 மில்லியன் நிதி ஏற்பாடு பேருவளை பிரதேசத்திலுள்ள 03 கால்வாய்களைப் புனரமைப்பதற்காக மாத்தறை மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 7.53 மில்லியன் ஒப்பந்ததாரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. மாவட்ட செயலாளர் 2014 திசெம்பர் 04 ஆந் திகதி திக்வெல்ல பிரதேச சபையுடன் மேற்கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் வேலை 2014 திசெம்பர் 30 ஆந் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்து. எனினும் நிர்மாணங்களின் செயல் முன்னேற்றம் பலவீனமான நிலையில் காணப்பட்டது. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) எதுவித முறையான அங்கீகாரமும் இல்லாது வெளிவாரி மற்றும் மேலதிக வேலைகளுடன் நிறைவேற்றப்பட்டிருந்த 3 வேலைகளுக்குரிய இறுதி விலைப்பட்டியல் 2016 ஒக்டோபர் மாத்தின் போது மாவட்ட செயலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அந்த விலைப்பட்டியல்களின் பிரகாரம் செய்த வேலைகளின் பெறுமதியாக ரூபா 20.79 மில்லியன் கொடுப்பனவுகள் சிபார்சு செய்யப்பட்டிருந்தது. எனினும் 2017 ஆகஸ்ட் 01 ஆந் திகதி மற்றும் 02 ஆந் திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது நிறைவேற்றப்பட்ட வேலைகளின் அளவை விட மேலதிகமான வேலைகளுக்காக விலைப்பட்டியல்கள் சமர்பிக்கப்பட்டன. கணக்காய்வு ஐயவினாக்களை வழங்கியதன் பின்னர் தயாரிக்கப்பட்ட திருத்திய விலைப்பட்டியல்களுடன் ஒப்பீடு செய்த போது ஒப்பந்தகாரருக்கு விலைப்பட்டியல்களின் மூலம் ரூபா 2.40 மில்லியன் மேலதிகமாகச் செலுத்துவதற்கு சிபார்சு செய்யப்பட்டிருந்தது.

(ii) இம்மூன்று கால்வாய்களிலும் கொங்கிறீட் காண்களின் அடித்தளத்திற்கும் சுவர்களுக்கும் விரிவாக்கல் முட்டுக்கள் வைக்கப்படாதிருந்ததுடன் சுவர்களில் வைக்கப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வின் பின்னர் உரிய கால்வாய்களின் ஒரு பகுதிச் சுவர்களில் தயாரிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தும் கொங்கிறீட் சுவர்களுக்கு ஈடுபடுத்தப்பட்டிருந்த இருப்புக் கம்பிகள் வெளியில் தெரியும் வகையில் காணப்படுவதனால் கம்பிகள் துருப்பிடித்து கொங்கிறீட் சுவர்கள் வெடிக்கும் ஆபத்துக் காணப்பட்டது.

(iii) நிர்மாணிக்கப்பட்ட காண்களினூடாக வீடுகள் மற்றும் காணிகளில் ஒன்றுசேர்கின்ற நீர் வழிந்தோடுவதில்லை எனவும் சில இடங்களில் இக்காண்கள் தடையாக இருந்தன எனவும் மாத்தறை கதிர்காமம் புதிய புகையிரதப் பாதை செயற்திட்டத்தின் செயற்திட்ட பணிப்பாளரின் 2017 ஜுலை 04 ஆந் திகதிய MAT/DEL/CMC இலக்க போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு செயலாளருக்கு விலாசமிடப்பட்ட கடிதத்தின் மூலம் இக் கால்வாய் உரிய தரத்தில் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை எனவும் இதன் மூலம் பிரதேசத்திலுள்ள மக்களுக்கு பயன் கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. அக் காணத்தின் அடிப்படையில் அடிப்படையில்

செயற்திட்டத்திற்காக நிதி ஏற்பாட்டினை விடுவிப்பதனை சிபார்சு செய்ய முடியாதுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

(ஈ) தெய்யன்தர புதிய ஆரம்ப பாடசாலைக்கு 3 கட்டடங்கள் ஒரு மலசலகூட முறைமை அங்கவீனமற்ற மாணவர்களுக்கான 70x25 அடி அளவிலான கட்டடம் என்பவற்றின் 1ம் கட்ட நிர்மாணித்திற்காக 2014 ஆம் ஆண்டின் போது பொருதார அபிவிருத்தி அமைச்சினால் ரூபா 40 மில்லியன் நிதி ஏற்பாடும் 2015 ஆம் ஆண்டின் போது வெளிவிவகார அமைச்சினால் ரூபா 6.8 மில்லியன் நிதி ஏற்பாடும் வழங்கப்பட்டிருந்தது. மாவட்ட செயலகத்தினால் அதற்காக ரூபா 35.72 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. தென்மாகாண சபையின் அல்லது மாகாண கல்வித் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி நிர்மாணிக்கப்பட்ட இந் நீர்மாணங்களுள் ஆரம்ப பாடசாலையை ஸ்தாபிப்பதற்கான தேவையான ஏனைய வசதிகளும் இட வசதியும் போதியளவு இல்லாததன் அடிப்படையில் தென் மாகாண கல்வி அதிகாரிகள் இந் நிர்மாணத்தை பொறுப்பேற்பதனை நிராகரித்துள்ளார்கள்.

(உ) 2016 ஆம் ஆண்டின் போது 02 பிரதேச செயலகங்களால் அமுல்ப்படுதுதப்பட்ட இடைச் செருகல் கற்களைப் பரப்பி புனரமைப்புச் செய்யும் 30 செயற்திட்டங்களுக்கு முறையான அங்கீகரிக்கப்படாத அலகு விலைகளின் அடிப்படையில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டதன் காரணமாக ரூபா 1.06 மில்லியன் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) 2014 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு பிரேரணையின் பிரகாரம் அமுல்படுத்தப்பட்ட வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் மாவட்ட செயலாளர்களால் அமுல்படுத்தப்பட்டிருந்தன. அதன் கீழ் மாத்தறை மாவட்டத்தின் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கும் நிகழ்ச்சித்திட்ம் சம்பந்தமாக மாத்தறை மாவட்டத்தின் பிரதேச செயலகங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) மோட்டார் சைக்கிள்கள் வழங்கிய உத்தியோகத்தர்களுக்காக வழங்கிய மோட்டார் சைக்களிக்ளின் அனைத்து தகவல்களையும் உள்ளடக்கிய வெவ்வேறான கோவைகள் 05 ஆண்டுகள் கடக்கும் வரை பேணப்பட வேண்டியபோதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மோட்டார் சைக்கிளைப் பெற்றுக் கொண்ட ஒரு உத்தியோகத்தர் 05 ஆண்டுகள் கடப்பதற்கு முன்னர் சம்பளமற்ற விடுமுறையின் அடிப்படையில் அல்லது 06 மாத்திற்கு மேற்பட்ட காலம் சம்பளத்துடன் விடுமுறை பெற்று வெளிநாடு சென்றால் மோட்டார் சைக்கிள்களின் சந்தைப் பெறுமதி அறவிடப்படுதல் வேண்டும். அவ்வாறு வெளிநாடு சென்ற 04 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 579,680 தொகை மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iii) மோட்டார் சைக்கிளைப் பெற்றுக் கொண்ட ஒரு உத்தியோகத்தர் 05 ஆண்டுகள் கடப்பதற்கு முன்னர் மோட்டார் சைக்கிளுக்கு தகமையற்ற ஒரு பதவிக்குச் செல்லும் போதும் இராஜினாமாச் செய்யும் போதும் மோட்டார் சைக்கிளின் சந்தைப் பெறுமதியை அந்த உத்தியோகத்தரிடமிருந்து அறவீடு செய்ய வேண்டியிருந்தது. மோட்டார் சைக்கிளுக்கு தகமையற்ற பதவிக்கு நியமனம் பெற்ற 10 உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 1,378,520 தொகை அவ்வாறு அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(iv) 2014 ஜூன் 30 ஆந் திகதியில் எஞ்சிய சேவைக்காலம் ஒரு ஆண்டிற்கு குறைந்த உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள்களை வழங்கும் போது ரூபா 100,000 அறவிட வேண்டியிருந்தது. கம்புறுபிடிய பிரதேச செயலகத்தால்

அவ்வாறான உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 50,000 மாத்திரம் அறவீடு செய்யப்பட்டு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டிருந்தன.

(v) இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அனைத்து மோட்டார் சைக்கிள்களுக்காகவும் 05 ஆண்டுகள் கடக்கும் வரை இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் மூலம் அல்லது தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் மூலம் பூரண காப்புறுதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்தது. எனினும் பல உத்தியோகத்தர்கள் அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்காது மூன்றாம் தரப்பினர் காப்புறுதி பெற்றுக் கொண்டிருந்தனர். இது தொடர்பான பின்தொடர் நடவடிக்கை எதுவும் பிரதேச செயலகத்தினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) மாத்தறை மாவட்ட செயலகமானது இடர் முகாமைத்துவப் பிரிவு, திக்வெல்ல பிரதேச சபை, திக்வெல்ல பேருவளை வில்யாய பிரதேசத்தில் மழைநீர் முகாமைத்துவ செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு திட்டமிட்டிருந்தது. இக் காணியின் அபிவிருத்திக்கு, குளங்களைத் தோண்டுவதற்கு கடைகளை நிர்மாணிப்பதற்கு மற்றும் மலசலகூட முறைமைக்காக ரூபா 27.48 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) குளங்களுக்கு அருகாமையில் குடியிருக்கும் 123 குடும்பங்களுக்கு மத்தியில் 20 குடும்பங்களைக் கொண்ட ஒரு மாதிரி தெரிவு செய்யப்பட்டு கேள்விக் கொத்துக்கள் வழங்கி அவர்களின் கருத்துக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு அதற்கிணங்க செயற்திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அத்தரவுப் பத்திரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இச் செயற்திட்டத்தின் திட்டமிடல் கட்டத்தில் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய தொழில்நுட்ப அறிவு, ஆலோசனை அங்கீகாரம் என்பன கமநல சேவைகள் திணைக்களம் மத்திய சுற்றாடல் அதிகார சபை, தாழ் நிலங்களை நிரப்புதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் கூட்டுத்தாபனம் முதலிய அரசாங்க நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டதற்கான சான்று கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளுக்கு மாத்திரம் கமநல அபிவிருத்தி ஆணையாளரால் 2011 செம்தெம்பர் 19 ஆந் திகதி இணக்கப்பாடு வழங்கப்பட்டிருந்தது. இக்கடிதத்தின் மூலம் குளத்தைத் தோண்டும் போது ஏற்படக்கூடிய பாதகமான சுற்றாடல் தாக்கம் தொடர்பாக கூடுதலாக எச்சரிக்கப்பட்டிருந்தும் அது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) மழைநீர் முகாமைத்துவ செயற்திட்டத்தைப் போல் உத்தேச வெவுருகன்னல புனித பூமி அபிவிருத்திச் செயற்திட்டத்திற்குரிய செயற்பாடுகளுக்காக பேருவளை வில்யாய எனும் பெயருள்ள 10.9466 ஹெக்டயர் அளவான நீர் வழிந்தோடியுடனான காணி நிக்வெல்ல பிரதேச செயலகத்தால் காணிசுவீகரிப்பு அதிகாரச் சட்டத்தின் 460 ஆவது அத்தியாயத்தின் பிரகாரம் 2013 இன் 133 ஆம் இலக்க கட்டளைக்கு இணங்க 1809/23 ஆம் இலக்க 2013 மே 10 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமாணியில் பிரசுரிக்கப்பட்ட அறவித்தல்களின் பிரகாரம் அரசாங்கதிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. எனினும் காணி உரிமையாளர்களுக்கு இழப்பீடு செலுத்துவதற்குரிய இழப்பீட்டை மதிப்பீடு செய்தல் மற்றும் எஞ்சிய நடவடிக்கைகள் 2017 ஆகஸ்ட் 29 ஆந் திகதி வரை பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(iv) 2017 ஆகஸ்ட் 29 ஆந் திகதி வரை இக் குளம் காடுகள் வளர்ந்து நீர்த்தாவரங்களாலும் மூடப்பட்டிருந்தன.

(v) மழைநீர் ஒன்றுரேம் வகையில் நீர் வழிந்தோடும் நிலத்தை பேணுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 2,667,601 செலவு செய்து இப் பிரதேசத்தில் மண் நிரப்பி குவிக்கப்பட்டிருந்துது. அவ்வாறே மாத்தறை கதிர்காமம் புதிய புகையிரதப்பாதை செயற்திட்டத்தின் மூலமும் இக் காணிக்கு மண் நிரப்புதல் இடம்பெற்றிருந்தது.

(vi) இச் செயற்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகளை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துதல் 2017 திசெம்பர் மாதம் வரை இடம்பெற்றிருக்கவில்லை. அவ்வாறே இச் செலவுகளின் நலன்கள் பிரதேசத்தில் வசிப்பவர்களுக்கு கிடைக்காதிருந்ததுடன் பிரதேசத்தில் வசிப்பவர்கள் முகங்கொடுக்கின்ற வெள்ள ஆபத்துக்களுக்கும் தீர்வு கிடைத்திருக்கவில்லை.

(ஏ) தெனியாய சுற்றுலா விடுதியை நிர்மாணிப்பதற்காக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அந்த நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 15.94 மில்லியன் செலவு செய்து சுற்றுலா விடுதி நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் 2018 மார்ச் 31 ஆந் திகதி வரையும் அவற்றிலிருந்து எதிர்பார்த்த குறிக்கோள்களுக்காக ஈடுபடுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது. விடுதிக்காக ரூபா 1.52 மில்லியன் பெறுமதியான மனைப் பொருட்களை உள்ளடக்கிய உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் அப் பொருட்களும் உபகரணங்களும் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே சுற்றுலா விடுதி நிர்மாணிக்கப்பட்ட காணியை தீர்த்துவகைக்கும் நடவடிக்கையும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 2014 ஆம் ஆண்டிற்கான மகாண எழுச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்டு 2017 ஆம் ஆண்டிலும் தொடர்ச்சியாக செய்யப்பட்ட வேலைகளுக்காக ரூபா 127.63 செலவு செய்து 08 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தன. அச் செயற்திட்டம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் பொது மக்களின் தேவைக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் இச் செயற்திட்டங்களை அமுல்படுத்தும் போது அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஒழுங்கு விதிகளுக்கு முரணாக வேலை முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்ததுடன் அம் முற்பணங்களுக்கான பிணைகளும் செயலாற்றல் பிணைகளும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே நிர்மாணங்களில் காணப்பட்ட குறைபாடுகளைச் சரி செய்யாமை மற்றும் சில வேலைகளின் பகுதிகள் உரிய தரத்தில் நிர்மாணிக்கப்பட்டிருக்காததுடன் செயற்திட்டத்தை அமுல்படுத்தும் போது உரிய மேற்பார்வையும் இடம்பெற்றிருக்கவில்லை.

(ஒ) 2015 தெயட கிருள தேசிய அபிவிருத்தி நிழச்சித்திட்டத்தின் கீழ் வெவுருகன்னல புனித பூமி அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக ரூபா 22.52 மில்லியன் செலவு செய்து 16 கடைகளும் ஒரு மலசலகூட முறைமையும் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அந்த நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டு 05 ஆண்டுகள் கடந்திருந்தும் பொது மக்களின் தேவைப்பாட்டிற்காக ஈடுபடுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது. மேலும் மேற்கூறிய செலவில் உள்ளடக்கப்பட்ட மாத்தறை ஓய்வு விடுதியை மறுசீரமைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 1.06 மில்லியன் தொகையான செலவுகள் பொருளாதார ரீதியாக ஆக்கபூர்வமானவையல்ல. அவ்வாறே அந்த நிர்மாணத்திற்காக மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 281,404 தொகை கட்டடத் திணைக்களத்திற்குரியதாகக் காணப்பட்ட போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் மாவட்ட செயலகத்திற்கு அந் நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) தெற்கு வலய பொருளாதார வளங்களை நிரந்தரமாகப் பயன்படுத்தி வலயத்திலுள்ள மக்களின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்துவதற்காக 2017 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு பிரேரணையின் பிரகாரம் மாத்தறை மாவட்டத்தில் 519 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக ரூபா 382.98 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அவற்றில் ரூபா 365 மில்லியன் தொகையான 506 செய்றதிட்டங்கள் மாத்திரம் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

(i) இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொடபொல பிரதேச செயலகத்தினால் அமுல்படுத்தப்பட்ட ரூபா 13.11 மில்லியன் தொகையான 12 வீதி அபிவிருத்திச் செயற்திட்டங்கள் தரப் பரிசோதனை அறிக்கைகளின் பிரகாரம் உரிய தரத்தில் காணப்பட்டிருக்கவில்லை.

(ii) இந் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் அமுல்படுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்ட ரூபா 70.10 மில்லியன் தொகையான 76 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. ரூபா 28.30 மில்லியன் உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதியான 41 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு முடியாமல் 2018 ஆம் ஆண்டிற்கு தொடர்ச்சியான வேலையாக ஆக்கவேண்டியேற்பட்டிருந்தது. அந்த தொடர்சியான வேலையாக்கப்பட்ட செயற்திட்டங்களை 2018 ஆம் ஆண்டின் போது அமுல்படுத்துவற்குத் தேவையான நிதி ஏற்பாடு 2018 மே 31 ஆந் திகதி வரையும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஔ) அரசாங்க நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் மீளாய்வாண்டில் நிறைவேற்றுனர் அல்லாத மட்டத்திலுள்ள உத்தியோகத்தர்களின் ஆற்றலை மேம்படுத்துவதற்காக 89 நிசழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு ரூபா 1.28 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அம் மதிப்பீடு 2017 ஆகஸ்ட் 01 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் முதலாவது கட்டமாக 18 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக ரூபா 275,425 நிதி ஏற்பாடு கிடைத்திருந்தது. மீளாய்வாண்டில் இறுதி வரை அந்த நிதி ஏற்பாட்டில் ரூபா 164,025 செலவு செய்து 12 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன. அதற்கிணங்க பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 111,400 அல்லது 40 சதவீதமான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க மீளாய்வாண்டில் உத்தியோகத்தர்களின் இயலுமையினை மேம்படுத்துவதற்காக திட்டங்களைத் தயாரிப்பதிலிருந்து அமுல்படுத்துதல் வரையான நடவடிக்கைகள் விளைதிறனாக இடம்பெற்றிருக்கவில்லை. நடாத்தப்பட்ட நிழச்சித்திட்டத்திற்காக பங்குபற்றுதல் எதிர்பார்த்த அளவில் 50 சதவீதம் மாத்திரமாக இருந்தது.

## 2.16 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்கு

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்

மாவட்ட செயலகத்திற்குரிய 26201 ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதியும் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியானவை | இழிவு எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 109.00 | 108.95 | 57.00 | 59.10 | 250.00 | 235.49 |

**நிலுவையாகக் காணப்பட்ட கடன் மீதிகள் அறவீடு செய்யாமை**

மீளாய்வாண்டிற்காக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளைத் தவிர்த்து நிலுவையாகக் காணப்பட்ட கடன் மீதிகள் ரூபா 238,163 கூட்டுமொத்தமாக இருந்தது. அந்த நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் 05 ஆண்டுகளிலிருந்து 12 ஆண்டுகள் வரையான காலவீச்சில் காணப்பட்டு வந்திருந்த போதிலும் அக் கடன் மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கையானது பலவீனமான நிலையில் காணப்பட்டது.

**2.17 கட்டுநிதிக் கணக்கு**

மீளாய்வாண்டின் போது அமுல்படுத்தப்படட 10 செயற்திட்டங்களிலுள்ள 969 நிர்மாண வேலைகளுக்காக ரூபா 813.21 தொகையைச் செலுத்துவதற்கு போதியளவு கட்டுநிதி பொது திறைசேரியால் வழங்கப்படாததன் காரணமாக பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தது. இதனால் அச் செலவுகளை 2018 ஆம் ஆண்டிற்கான நிதி ஏற்பாட்டிலிருந்து செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

**2.18 பொது வைப்புக் கணக்கு**

மாவட்ட செயலகத்தின் கீழுள்ள 05 பொது வைப்புக் கணக்குகளின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் மொத்த தொகை ரூபா 480.25 மில்லியனாக இருந்தது. அது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 04 வைப்புக் கணக்குக்குரிய திறைசேரி ஏடுகளின் பிரகாரம் மீதிக்கும் திணைக்கள ஏடுகளின் பிரகாரமான மீதிக்குமிடையே வித்தியாசம் காணப்பட்டது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| வைப்புக் கணக்குகளின் வகை | திறைசேரி ஏடுகளின் பிரகாரம் மீதி | திணைக்கள ஏடுகிளன் பிரகாரம் மீதி | வித்தியாசம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| பிணை வைப்பு | 1,449,885 | 1,157,551 | 292,334 |
| மூன்றாம் தரப்பினர்களுக்கு மீண்டும் கொடுப்பனவு செய்வதற்காக தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்ட வைப்பு | 24,764,333 | 25,022,952 | (258,619) |
| ஒப்பந்தத்திற்கான நிறுத்தி வைத்தல் பணம் | 317,204,819 | 317,101,669 | 103,151 |
| இழப்பீட்டுக் கொடுப்பனவு | 131,923,426 | 132,060,287 | (136,861) |

(ஆ) 2 ஆண்டுகளை மிகைத்த (காணி வைப்புக்களைத் தவிர்த்து) ரூபா 206.03 கூட்டுமொத்தமான 03 வைப்புக்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் பல்வேறு செயற்பாடுகளுக்காக வழங்கிய ரூபா 2.98 மில்லியன் மொத்த தொகையானது உரிய செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்குப் பயன்படுத்தப்படாது வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

(ஈ) மாத்தறை பிரதேச செயலகத்தில் 2003 ம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரையான காலத்தில் காணி இழப்பிட்டுக் கொடுப்பனவாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 37.50 மில்லியன் உரிய உரிமையை உறுதிப்படுத்தி கொடுப்பனவு செய்யப்படாது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்படடது.

**2.19 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களால் கீழே தரப்பட்டுள்ள சில பதிவேடுகளை பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறைப்படியாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | மாவட்ட செயலகம் தெவிநுவர, முலடியன, வெலிபிடிய ஆகிய பிரதேச செயலகங்கள் நாளதுவரையாகப் பேணியிருக்கவில்லை. |
| கணனி, துணைக்கருவி மென்பொருட்கள் என்பன தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றிக்கை | மாவட்ட செயலகம் மற்றும் தெவிநுவர பிரதேச செயலகம் பதிவேடுகளை நாளதுவரையாகப் பேணியிருக்கவில்லை.<br>திஹகொட மற்றும் மாத்தறை பிரதேச செயலகங்கள் பதிவேடுகளைப் பேணியிருக்கவில்லை |
| மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 454 (2) | திஹகொட பிரதேச செயலகத்தால் பேணப்பட்டிருக்கவில்லை. |
| அடியிதழ் புத்தகப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 341 | திஹகொட பிரதேச செயலகத்தினால் பேணப்பட்டிருக்கவில்லை |
| வாகன சம்பவக் குறிப்பு புத்தகம் | நிதிப்பிரமாணம் 1645(ஈ) | திஹகொட பிரதேச செயலகத்தால் பேணப்பட்டிருக்கவில்லை |
| பெறுகைக்குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழுவினதும் வருகைப் பதிவேடு | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டிகள் | மாவட்ட செயலகத்தினால் பேணப்பட்டிருக்கவில்லை |

**2.20 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஒழுங்கு விதிகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | |
| XIX ஆம் அத்தியாயத்தின் 4.1 ஆம் உப பிரிவு | தாபன விதிக்கோவையிலுள்ள ஒழுங்கு விதிகளுக்கு முரணாக 04 உத்தியோகத்தர்களுக்கு வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன. |
| XIX ஆம் அத்தியாயம்தின் 4.3.1 ஆம் உப பிரிவு | 15 வீட்டு விண்ணப்பபடிவங்களின் சரியான தன்மை திணைக்களம் அல்லது உப அலுவலகத்தின் தலைவரின் மூலம் உறுதிப்படுத்தி சமர்ப்பிக்கப்படாததுடன் அந்த விண்ணப்பதாரர்களில் 04 நபர்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டிருந்தன. |
| XIX ஆம் அத்தியாயத்தின் 4.4 ஆம் உப பிரிவு | வீடுகளை ஒதுக்கிடு செய்யும் போது வீட்டுக் குழுவினால் புள்ளிகள் வழங்கும் நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |
| XIX ஆம் அத்தியாயத்தின் 5.4 ஆம் பிரிவு மற்றும் 2016 ஆகஸ்ட் 26 ஆந் திகதிய 04/2016 ஆம் இலக்கம் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை | பட்டியற்படுத்தப்பட்ட வீட்டுக்குத் தகமையற்ற உத்தியோகத்தர்களின் துணைவி அரசாங்க சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பார்களாகயிருந்தால் 2016 பெப்ரவரி 02 ஆந் திகதி வரை இரண்டு நபர்களிடமிருந்தும் வாடகை அறவிடப்பட வேண்டிய போதிலும் இரண்டு உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக 02 சந்தர்ப்பங்களின் போது அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| IIX ஆம் அத்தியாயத்தின் 6.1 ஆம் பிரிவு | அரசாங்க இல்லங்களின் குத்தகை காலம் 05 ஆண்டுகளாக இருந்த போதிலும் அக்காலத்தை மிகைத்திருந்த இரண்டு உத்தியோகத்தர்களுக்கு பல சந்தர்ப்பங்களின் போது காலம் நீடிக்கப்பட்டிருந்தது. |

## 2.21 மனித வளங்கள் முகாமைத்துவம்

### இணைத்துக் கொள்ளப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவு

மேலே 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரித்த, உள்ளபடியான, வெற்றிடமான மற்றும் மிகையான பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன. மீளாய்வாண்டிற்காக மாவட்ட செயலகத்தால் ஆளணி வேதனச் செலவுத் தொகுதிக்காக ரூபா 781.7 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஒரு தனிநபருக்கான செலவு ரூபா 488,842 ஆகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான பதவியணியினர் |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 56 | 50 | 06 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 39 | 21 | 18 | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 1482 | 1385 | 99 | 02 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 157 | 142 | 15 | - |
| (v) | அமையம் / ஒப்பந்தம் | - | 01 | - | 01 |
| | மொத்தம் | 1734 | 1599 | 138 | 03 |

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) தேவைப்பாட்டினை மிகைத்து பதவியணியனர் அங்கீகரித்துக் கொள்ளப்படுதல்**

மீளாய்வாண்டின் இறுதியளவில் 138 வெற்றிடங்கள் காணப்பட்டிருந்தும் 2017 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பாது சேமிக்கப்பட்டிருந்தது. அச் சேமிப்புக்கள் தொடர்பாக பதவியணியனர் வெற்றிடங்கள் காணப்படுகின்றமை தாக்கமளித்திருந்துத.

**(ஆ) பதவியணியினரைப் பயிற்றுவித்தல்**

மீளாய்வாண்டில் பதவியணியினரைப் பயிற்றுவிப்பதற்கான அனைத்து நிதி ஏற்பாடுகளும் பயன்படுத்தப்படாதிருந்தும் மாவட்ட செயலகத்திலுள்ள 73 உத்தியோகத்தர்களும் 14 பிரதேச செயலகங்களிலுள்ள 594 உத்தியோகத்தர்களுக்கு எவ்வகையிலும் பயிற்சி வழங்கப்பட்டிருக்கவில்லை.